உ

சிதம்பரம் தாலூக்கா

# மிராசுதார்களின்

## மகாநாடு.

1934.

தலைமைப் பேருரை.

திருவாளர்

**V. நாடிமுத்துப் பிள்ளை அவர்கள், M. L. C.**

தஞ்சைக் கூட்டுறவுப் பதிப்பகம், கரந்தை.

சிதம்பரம் தாலூக்கா,

மிராசுதார்கள் மகாநாட்டுத் தலைவர்,



V. நாடிமுத்துப் பிள்ளை, M. L. C.

உ

## சிதம்பரம் தாலூக்கா
## மிராசுதார்களின் மகாநாடு

### தலைவர்,
### திரு. V. நாடிமுத்துப் பிள்ளை அவர்கள் M.L.C.,

# தலைமைப் பேருரை.

(30—12—34.)

பெருந்தகையீர்!

இந்நிலவுலகில் மக்கள் தோன்றிய காலத்திற்கு முன்னரேயே தோன்றியதாயும் காலமுங்கணக்கும் நீத்ததாயும், "தில்லைவாழ் அந்தணர்" என்று புலவர் பெருமானால் போற்றப் பெறூஉம் பெருந்தகையாளர்களை அனாதிக் காலமுதற்கொண்டே தன்னகத்தே கொண்டதாயும், புலியும், பாம்பும், பணிசெய்வதற்கிடனாயதூஉம், இறப்பு, எதிர்வு, நிகழ்வு என்ற கால வரையறைக் கட்டுகட்கடங்காததாயும், எவ்வம்பலங்கட்கு மேலாம் பொன்னம்பலத்தைத் தன்னுட் பொருந்தியதாயும் சோணாட்டின் வளனும், பாண்டிநாட்டின் தமிழ் நலனும், தொண்டை நன்னாட்டின் சான்றாண்மையும் உடைமையால் கலைமகள், திருமகள் மலைமகள் என்னும் மூவகைச் சத்திகளும் உலாவரும் அரங்கமாயும் சைவ வைணவம் என்னும் இருபெருஞ் சமயங்களுக்கும் இடமாய ஆலயங்களைத் தன்னுள் விளக்கமுறக் கொண்டதாயும் உள்ள, இந்த புண்ணிய நகரமாகிய சிதம்பரத்தின்கண்ணே, எத்தொழிற்கும் முதற்றொழிலாகியும், எல்லாத் தொழில்துறைகட்கும் தாயகமாகியும், அரசர் வருவாய்க்குப் பேரிடனாயும் உள்ள தீவினைஎன்பதிலாத வேளாண்மை குறித்த செய்திகளை நலனுற ஆராயும் மிராசுதார்களின் மகாநாடு ஒன்று கூடுதல் மிகப் பொருத்தம்

உடையதேயாம். அம்பலத்தில் நாடுசேர்தல் அழகியதன்றோ! இத்தகைய சிறப்புற்றோங்கிய மகா நாட்டிற்குத் தலைமைபூணும் பெரியோர்க்கிருக்கவேண்டிய நலங்கள் ஒரு சிறிதும் இல்லாத என்னைத் தலைமை பூணும்படி நீங்கள் விரும்பினமைக்கு நான் எனது மனமார்ந்த வந்தனத்தை உங்கட்கு அளிக்கின்றேன். இம் மகாநாட்டை நடத்தும் ஆற்றல் எனக்கு இல்லை என்றாலும் உங்கள் அருளும், அன்பும், ஒற்றுமையும் தகுந்த துணைகளாகக்கொண்டு, ஒருவாறு இந்த மகாநாட்டை நடத்திவைக்கலாம் என்ற துணிபுபற்றி நான் இத்தலைமையை எற்றுக்கொள்ளுகிறேன். மிக அணித்தான காலத்தில் நடைபெற்ற இந்திய சட்டசபை தேர்தலில் இணையற்ற வெற்றி பெற்றவீரரும், தமது வாணாளைத் தாய்நாட்டின் உழைப்பிற்கே ஈடுபடுத்தும் தன்மைவாய்ந்தவரும், தனக்கென் வாழா பிறர்க் குறியாளரும், இவ்விந்திய அன்னையின் பெருந்தகை மைந்தரும் சொல்லின் செல்வரும், கல்விக் களஞ்சியமும் ஆகிய, இப்பொழுது இந்த மகாநாட்டைத் திறந்த பரமபுருடராய திரு. S. சத்தியமூர்த்தி அய்யர் அவர்கள் உங்கட்குப் புதியவரல்லர். இந்நகரில் உள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சார்பாய் உங்களிடம் அவர் பற்பல சமயங்களில் கலந்துவந்துள்ளார். இப்பெரியாரது அளவிறந்த ஆற்றலும், உலகம் பரந்த, மனிதர்களையும் விடயங்களையும் நுணுகி அறியும் நுழை மாண்புலமையும் தென்ஆற்காடு ஜில்லாவில் இவர்க்கு உள்ள அனுபவமும், இப்பொழுது எற்பட்டுள்ள நமது கஷ்ட நிலைமையை மாற்ற எற்ற வழிகளை நாட இந்திய அரசாங்கத்தாரை ஊக்குவிப்பதற்கு நமக்கு துணையாகும் என்னும் உறுதி எனக்கு உண்டு.

# விவசாயிகளின் கஷ்டநிலை.

மிக விரைவில் ஏற்றுக்கொண்டு பரிசீலனை செய்து நாட்டிற்கு நன்மையைத்தேட நமது மாகாண அரசியலார் முன்வர வேண்டியவிஷயங்களுள் தலைசிறந்ததுயாதென்றால், விவசாயிகள் சம்மந்தமுள்ள விஷயமாகும். இவ்விஷயம் இந்த ஜில்லாவை மட்டும் குறித்ததென்றாவது, அந்த ஜில்லாவை குறித்ததென்றாவது இல்லை; இந்த பாகத்தைப்பற்றியதென்றாவது, அந்தப் பாகத்தைப்பற்றிய தென்றாவது இல்லை. விவசாயிகளைப் பொருத்தமட்டில் ஏற்பட்டுள்ள இந்தகஷ்டநிலை மிகப்பரந்தது என்பது மாத்திரம் அல்ல; மிக ஆழமும், சுருக்கெனத் தைப்பதும், மிக விரைவில் நிவாரண மார்க்கம் தேடவேண்டிய தொன்றுமாகும். ஆனால் நமது துரதிர்ஷ்டகாரணமாக அதிகார வர்க்கத்தினர் நமது கஷ்டநிலையினை உணரவில்லை. சென்ற ஐம்பது ஆண்டுகட்கு முன்பாக நமது நிலவரியின் தன்மை அக்காலத்திற்கு ஏற்றவிதமாக இருந்திருக்கலாம்; ஆனால் அது இக்காலத்திற்கு ஏற்றதல்ல, மிகப் பழங்காலச் செய்தியாகவும் இப்பொழுதுள்ள நிலைமைக்கு மாறானதாகவும், திருப்தி அளிக்கும்வன்மை இல்லாததாயும் இருக்கிறது. வேளாண்மைக்கு ஏற்ற நிலங்கள் ஏராளமாயும், மனிதர்க்கு இன்றியமையாதன வாய்க்கொள்ளப்பெறும் தேவைகள் மிகச் சுருங்கிய நிலையில் நமது இந்தியநாடு பிரிட்டிஷ் ஆதிக்கத்திற்கு வருவதற்கு முன்னிருந்த சாதாரண நிலையில், இப்பொழுதுள்ள ரயத்துவாரி செட்டில்மெண்டு மிகச் சிறந்ததாகக் காணப்பட்டிருக்கலாகும். ஆனால் மாந்தர்களின் வாழ்க்கைநிலை பரந்துபட்ட இக்காலத்தில் இவ்விதமான நிலவரி ஏற்பாடுகள் நியாயத்திற்குப் பொருத்தமுடையனவாகத் தோன்றவில்லை. இப்பொழுது, ஆராயுமிடத்து நிலவரியானது எளிய குடியானவர்களை மிகக் கஷ்டநிலைக்குக் கொண்டுவந்துவிட்டது என்பதில் தடையில்லை.

## திருத்த ஏற்பாடு (ரீசெட்டில்மெண்டு)

சிதம்பரம் தாலுக்காவின் முக்கிய விளைப்பொருள்களாகிய நெல்லும் நிலக்கடலையும் உயர்ந்து விற்றகாலமாகிய 1919-20 ல், இந்தத் தாலுக்காவில் வரியைப்பற்றிய திருத்த ஏற்பாடு செய்திருப்பதாகத் தோன்றுகிறது. அப்பொழுது, அரசாங்கத்தார் ஏற்கனவே இருந்த அளவிலும் நூற்றிற்கு $33\frac{1}{3}$ பாகம் நிலவரியை உயர்த்தியிருப்பதாகத் தோன்றுகிறது. என்றாலும், திருத்தவரி ஏற்பட்டு அமுலிலிருக்கும் கால முற்றிலும் விலைவாசிகளும் ஒரே படித்தரத்தில் இருக்கும் என்ற ஓர் பரபரப்பான நம்பிக்கையினை மேற்கொண்டவர்களாகி, மிராசுதார்கள் வரி உயர்வைக் குறித்து எதிர்வழக்கு இடவில்லை ஆனால் இதற்கடுத்தாற்போலுள்ள தஞ்சை ஜில்லாவில் நிலவரி நூற்றிற்கு முதலில் 25% இலிருந்து $18\frac{3}{4}$ விழுக்காடு உயர்த்தப் பட்டது. அங்கே இந்த உயர்ந்த வரியைக் கொடுக்கும் ஆற்றல் மிராசுதார்கட்கு இல்லை. சமீபத்தில் 12% தள்ளிக்கொடுக்கப் பெற்றதென்றாலும் மிராசுதார்களின் கஷ்டத்தை அது ஒரு சிறிதும் மாற்றமுடியவில்லை. எஞ்சிய சில தங்க நகைகளையும் தட்டுமுட்டுகளையும் விற்று நாளுக்குநாள் வறுமையால் வாட்ட முற்றவர்களாகி, சங்கமசொத்து ஜப்திகளை ஒருவாறு தடுத்துக் கொண்டு வருகிறார்கள். இவ்விதமாக எவ்வளவு காலந்தான் கழிக்கமுடியுமோ, தெரியவில்லை. இந்த உயர்ந்த வரியின் காரணமாக மிராசுதார்கள் தங்கட்கு இன்றியமையாச் சௌக்கரியங்களையும் செய்துகொள்ள முடியவில்லை என்று பொதுப்படக் கூறுவதன்றி விரிவாகச் சொல்வதெப்படி? இனி வருஷவாரி வரியின் விகிதத்தை நிச்சயிக்குமாறு எடுத்துக்கொள்ளப்பட்ட வருஷங்களோ என்றால், அளவுமீறி விலைவாசிகள் அதிகமாக உயர்ந்திருந்த ஒரு சில வருஷங்களாகும். இந்த உயர்ந்து விலை

விற்ற சில வருஷங்களின் சாராசரி விலைகளை ஆதாரமாகக் கொண்டு, இந்த புதிய ஏற்பாட்டின்படி போடப்பட்டவரியே இப்பொழுது நம்மால் தாங்கவொண்ணாத சுமையாயிருக்கிறது. இந்தத் தாலூக்காவிலும் ஏனைய இடங்களிற்போல உயர்ந்து விற்ற காலமாகிய ஐரோப்பிய மகா யுத்த காலத்தில்தான் உயர்ந்தவரி போடப்பட்டது. சென்ற மூன்று ஆண்டுகளாகவோ நாம் எதிர்பாராதவிதமாக விலைவாசிகள் திடீரென இறங்கிவிட்டன. சென்னை இராஜதானியின் ஓர் பகுதியாகிய இங்கே இந்த உயர்ந்த விலை விற்றதுபோதாதென்று சொல்வது போன்று, வரவர மிக எளியவர்களாகி வருகிற இந்தத் தாலூகா மிராசுதார்களின் துன்பத்திற்குக் காரணமாகிய கடந்த சுமார் இருபது வருடங்களின் முன் வீராநத்தம் ஏரியில் எடுத்த பிரபல உடைப்புக்களால் உண்டாகிய பெருஞ் சேதம், வறுமை முதலியவற்றினின்றும் ஒருவாறு தேறிக்கொண்டு வரும் பொழுது, சென்ற நான்கு வருஷங்களிலும் அபரிமிதமான மழையினாலும், சமீபத்தில் அடித்த பெருங்காற்றினால் மிராசுதார்கட்கு உண்டான துன்பத்திற்கோ எல்லையில்லை. இந்த ஜில்லா கலெக்டர் அவர்களும் இந்தத் துன்பத்திற்காளாகிய பகுதிகளை நேரில்கண்டும், இன்னும் தமது உத்தியோகஸ்தர்கள் மூலமாகவும் நிலைமையினை நன்கு பரிசீலனைசெய்து, வரியையும் ஓர் பகுதி, தள்ளிக்கொடுத்து இருக்கிறார். ஆனால் நிரந்தரமான ஓர் நன்மையை அரசாங்கத்தார் செய்துக்கொடுத்தாலொழிய இந்த தாலுக்காவிலுள்ள மிராசுதார்கள் தங்களை எப்பொழுதும் பீடித்துள்ள இவ்வபரிமிதமான வரியென்னும் ஆபத்தினின்றும் உய்ய இடமில்லை. ஆனால் மத்திய மாகாணம் பாஞ்சாலம் முதலிய மாகாணங்களில் அரசாங்கத்தார், தமது உத்தியோகஸ்தர்களின் மாதச்சம்பளத்தில் ஒரு பங்கைப் பிடித்தம் செய்தும் வரியில் நூற்றுக்கு 25% தள்ளிக்கொடுத்தும் தமது குடிகட்கு நன்மை செய்தார்கள்; ஆனால் நமது சென்னை அரசாங்கத்

தினரோ ஏதோ தமது வரவு செலவு திட்டக் கணக்கில் ஒரு சிவலே மிச்சம் இருப்பதாகச் சொல்லி, சம்பளப்பிடித்தத்தைத் தள்ளி வரியில் ஒரு பகுதியும் தள்ளிக்கொடுக்காமல் இருக் கிறுர்கள்.

---

## உண்மையான நிலைமை.

நிலவரி சம்பந்தமான வரியை வசூலிப்பதற்கு அரசாங்கத் தார் ஒரு பெரிய அபரிமிதமான சம்பளங்கொடுக்கப்பெறும் உத்தியோகஸ்தர்களையும் சிப்பந்திவர்க்கத்தாரையும் ஏற்படுத்தி யுள்ளார். தேசத்தில் கிடைக்கும் இந்த நிலவரிக்கும், இதனை சங்கம ஜப்தி முதலிய நடவடிக்கைகள் செய்தேனும் வசூலிக் கும்படி ஏற்பட்டுள்ள சிப்பந்தி வர்க்கத்தாரின் சம்பளத்தால் அரசாங்கத்தாருக்கு ஏற்படும் செலவிற்கும் யாதொரு பொருத்தமில்லை. ஏனை நாடுகளில் ஏற்பட்ட வரிக்கும் அதனை வசூலிக்கும் உத்தியோகஸ்தர்களால் ஏற்படும் சம்பள செலவிற் கும் இவ்வளவு பெரிய தாரதம்மியம் இருப்பதாகப் புலப்பட வில்லை. இந்நாட்டில் வரி செலுத்தப்படவில்லையென்ருல் உடனே ஜங்கம சொத்து ஜப்தி செய்யப்படுகிறது. அரசாங்கத்தார் உண்மையில் வரிவாங்கும் உத்தியோகஸ்தர்களிடம் தயவு காட்டு கிறுர்களேயொழிய வரிசெலுத்தும் குடிகளிடம் அவ்வளவு கவலை எடுத்துக்கொள்ளவில்லை யென்பது வெளிப்படை. ஆனுல் வரி செலுத்தும் ஏழைக்குடியானவன் எந்த நிலைமையில் இருக்கிறுன் என்ருல் தனக்கு இந்த அபரிமிதமான, தனது செலுத்தும் சக்திக்கும் அப்பாற்பட்ட இந்த வரி விஷயமாய் பிறரிடம் பேசும் திறமையில்லாத ஊமையாகவும், தனக்கு உண்டாகும் எத்தகைய இடுக்கண்கட்கும் காரணம் "விதி" என்று ஒப்பி விக்கும் ஓர் மனப்பாங்கையுடையவனுகவும் இருக்கின்றுன்.

சங்கம சொத்துக்கள் ஜப்தி செய்யப்படுமேயென்ற பயங் காரணமாக வரிகளை செலுத்துகிறார்களே தவிர பெரும்பாலும் மிராசுதார்கள் வரிகளை சுலபமாய் செலுத்தும் ஆற்றல் படைத்தவர்களென்று சொல்வதற்கில்லை. மிக எளிதாக வரி வசூலிக்கப்படுகிறதென்றும், அதனால் மிராசுதார்களின் நிலைமை அவர்கள் சொல்லிக்கொள்வதைப்போல, அவ்வவளவு கஷ்ட நிலையில் இல்லை யென்றும் அரசாங்கத்தார் கூறுவது, வரி செலுத்துவதின் முக்கிய காரணம் இன்னது என்று தெரிந்துகொள்ளாததாகும். சொத்துக்கள் ஜப்தி செய்யப்படுமே, இந்த அவமானத்தை எப்படி விலக்கிக்கொள்வது என்ற ஓர் பரபரப்பினால், தனக்கு வரியைச் செலுத்தும் ஆற்றல் இருக்கிறதோ இல்லையோ என்பதை ஒரு சிறிதும் கவனியாதவனாகி கடன் பட்டோ, தான் மிக இரகசியமாக வைத்திருக்கும் சிறிய நகைகளையும் பண்டங்களையும் விற்றோ இந்த ஜப்தி என்னும் கஷ்டத்தை குடியானவர்களும் மிராசுதார்களும் போக்கிக்கொள்ளுகிறார்கள். இவர்களில் ஒவ்வொருவரும் கடனில் மூழ்கி மிக்க கஷ்ட திசையில் இருக்கிறார்கள். இதற்குக் காரணம் நிலவருமான சம்பந்தமாய் அரசாங்கத்தாருக்கு இருக்கும் சட்டதிட்ட முறைகளேயாம்.

மிகவும் காலப்பிற்பாடாகிய செய்தியென சொல்லிக்கொண்டாலும் விவசாயிகளின் கடன் எவ்வளவு விசாலித்ததெனத் தெரிந்துகொள்ள அரசாங்கத்தார் ஒரு பரிசீலனை செய்ய உத்தரவளித்துள்ளார்கள். எவ்வளவு காலத்திற்குள் இப்பரிசீலனை முடிவு எய்தும் என்பதும், அதன் முடிபுகள் எப்படி அமையப்போகின்றன என்றும், அம்முடிபுகளை முன்னிட்டு அரசியலார் என்ன உத்திரவுகளை முடிவாக இடப்போகிறார்களென்றும் இப்பொழுது நாம் நுனித்து அறியமுடியவில்லை. இவைகளெல்லாம் இவ்விஷயமாய் நியமிக்கப்பெறும்

பிரத்தியேக உத்தியோகஸ்தர் (Special Officer) கையாளும் ஆராய்ச்சி முறைகளையும், பரீக்ஷிக்கப்பெறும் சாட்சியங்களைப் பொருத்தும், தனித்தனியேயும் ஒன்று கூடியும் மிராசுதார்கள் ஆற்றும் உதவியையும், ஒவ்வொரு ஜில்லாவிலும் உள்ள பல்வகைத்தாய நிலைமைகளையும் பொருத்தும் இருக்கும். இப் பரிசீலனை சற்று முன்பாகவே ஆரம்பித்திருந்தால் இதுபோது குடிமக்கள் அடையும் துன்பத்தை நிவர்த்திக்க ஓர் பெரிய துணைக்கருவியாயிருந்திருக்கும். ஆனால் கடந்ததை நினைந்து கவலைப்படுதனில் பயன் யாதுளது? இப்பரிசீலனை முடியுங் காறும் காத்திராது இன்றே இப்பொழுதே தமது செல்வப் பெருக்கிற்கு மூலாதாரமாகிய விவசாயிகள் இருந்தவிடம் தெரியாமல் மறைந்துபோய்க் கொண்டிருப்பதை மாற்றவேண்டும் என்றால், உடனே காலந்தாழ்க்காது கஷ்டத்தைப்போக்கும் உபாயங்களைத் தேடுவது நமது அரசியலாரின் முதற்கடமையாகும்.

நமது நாட்டில் மிராசுதார்கள் தங்கள் நாணயத்தை இழந்துவிட்டார்கள். இனி அவர்கட்குக் கடன் கொடுப்பார் எவரும் இலர். காரணம் யாதெனின் நிலவிலை வீழ்ச்சியும், விளைபொருள்களின் விலைவாசிகளில் குறைவுமேயாகும். அடுத்த மாதம் வாய்தாவிற்கு யாது செய்யப்போகிறோம் என்ற திகைப்பு எல்லாருக்கும் வந்துவிட்டது. இத்திகைப்பினின்றும் உய்ய இவர்கட்குப் புலந்தெரியவில்லை. தங்கள் கஷ்டங்களைப் பிறரறியாதவண்ணம் மறைக்கும் தொன்றுதொட்டு பரம்பரையாய் இவர்கட்கிருக்கும் நாணமே இவர்களின் உள்ளபடியிருக்கும் வறுமை நிலைமையை பிறர் காணாதவாறு மறைப்பதாகும். இக்காரணத்தைக் கொண்டே அரசியலாரும் மிராசுதார்கள் உண்மையில் பணக்காரர்களென்றும் உயர்ந்த வரிகளைச் செலுத்த ஆற்றல் உடையவர்களென்றும் கருதுகின்றனர். மெய

அரசாட்சி வேண்டும் என்ற கிளர்ச்சி நமது நாட்டிற்கு வேண்டியதே. என்றாலும் மிராசுதார்களின் கஷ்டத்தைப் போக்க வேண்டியதுதான் இப்பொழுது நாம் கவனிக்க வேண்டிய விஷயமாகும். இந்தக் கஷ்டத்தை நிவர்த்திக்க வேண்டிய மார்க்கத்தை அனுசரிப்பதே அரசாங்கத்தாரின் முதற்கடமையாகும்.

இந்த உயர்ந்தவரியை அரசாங்கத்தார் வரி செலுத்துபவரின் ஆற்றலைக் கவனியாது எங்ஙனமேனும் குடிகளினின்றும் வசூலித்துவிடவேண்டுமென்று பிடிவாதம் செய்தால் அதன் முடிவு என்னவென்றால் அதிக செலவில் ஒரு திரண்ட வசூல் செய்யும் உத்தியோகஸ்தர்களை வைத்துப் பரிபாலிக்கவேண்டி வரும். அதன் முடிவு யாதெனில் வசூலிக்கும் தொகையே சிப்பந்திச் செலவிற்குப் போதாமல் இருக்கும் நிலைமைக்கு வந்துவிடும். இந்த கஷ்டத்திலிருந்து ஒருவாறு நமக்கு நிவர்த்தி தேடும் மார்க்கம் என்ன என்றால் பஞ்சாப் கவர்னராகிய (Sir Herbert) அவர்கள் கூறியதுபோல கடந்த இருபது வருஷத்தின் சராசரியை எடுத்துக்கொண்டு சென்ற ஒவ்வொரு வருஷத்தில் இருக்கும் நிலைமைக்குஏற்பச் செய்வதாகும்.

---

## உயர்ந்த சம்பளங்கள்.

சம்பளப் பிடித்தமாகிய நூற்றுக்கு 10% குறைவை எடுத்துவிடலாம் என்று அரசாங்கத்தார் செய்ததைக்கொண்டே நமது அரசியலார் மிராசுதார்களின் கஷ்ட நிலைமையை நன்கு கவனிக்கவில்லை என்பது தெற்றெனப் புலப்படுகிறது. இப்பொழுதுள்ள நிலைமைக்கு சம்பளங்கள் உயர்த்தப்பட்ட காரணம் எவருக்குத் தெரியாது? ஐரோப்பிய மகாயுத்தம் நடை

பெறுங் காலத்திலும் அதன் பிறகும் அல்லவா சம்பளங்கள் இப்பொழுதுள்ள நிலைமைக்கு உயர்த்தப்பட்டன. விளைபொருள்கள் முதலிய வாழ்க்கைக்குரியசாதனங்கள் மிக உயர்ந்த விலைக்குக் கிடைத்த அந்த காலத்தில் அல்லவா அதற்கேற்ப சம்பளங்களும் உயர்த்தப்பட்டன. சம்பளங்கள் உயரக் காரணமாயிருந்த விலைவாசிகள் மிக உயர்ந்த நிலைமையிலிருந்து அடியோடு கீழ் வீழ்ந்த இந்தக் காலத்தில் இன்னும் ஏன் உயர்ந்த சம்பளங்கள் இருக்கவேண்டும்? இப்பொழுதிருக்கும் விலையில் விளைபொருள்கள் விற்றகாலங்களில் நிலவரி எந்த அளவிலிருந்தது? யுத்தத்திற்குமுன் இருந்த நிலைமைக்கு உத்தியோகஸ்தர்களின் சம்பளங்களையும் வரிகளையும் ஏன் கொண்டுவரக்கூடாது? வரியைக் குறைக்கவேண்டும் என்ற வேண்டுகோள் மிராசுதார்களிடமிருந்து பிறந்ததோ இல்லையோ, ஒருவித சீர்திருத்தமும் செய்ய முடியாது என்ற விடை உண்டாகிறது; நமது அமைச்சர்களும் அப்படியே விடை தரவேண்டியது தமது கடமையென நினைக்கிறார்கள். நிலவரியிலிருந்து கிடைக்கும் வருமானம் குறிப்பிட்ட இந்த வேலைகட்கே சென்றகாலங்களிலும் உபயோகப்பட்டு வந்திருக்கிறது என்று இருந்தால், இந்த சமாதானம் நியாயம் என்று சொல்லலாம். பொறுக்கமுடியாத வரிச்சுமையிலிருந்து குடியானவர்களை நிவர்த்திக்க வேண்டுமென்றால் யுத்தத்திற்கு முன்னிருந்த அளவிற்கே உத்தியோகஸ்தர்களின் சம்பளங்களை முதலில் குறைக்கவேண்டும். பிறகு ஒவ்வொரு தலைப்பின்கீழும் ஏற்பட்ட செலவுகளை அதற்கியையக் குறைக்கவேண்டும். இப்படிச் செய்யாமல், ஒரு சிலகாலம் வரிவசூலிப்பதை நிவர்த்திப்பதாவது, ஏதாவது ஒரு பாகத்தை தள்ளிக் கொடுப்பதாவது எந்த நன்மையும் பயப்பதாகாது. இப்பொழுது வரியின் நிலைமையும், விலைவாசிகளில் குறைவுமே ஒன்று சேர்ந்து மிராசுதார்களை இந்தப் பரிதாப நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறது என்பதை மறுக்க முடியாது.

# வெளிநாடுகளிலிருந்து அரிசி இறக்குமதி.

விலைவாசிகளில் குறைவு ஏற்படுதற்கு மற்றொருகாரணம் என்னவென்றால் தென்னிந்தியாவிற்கு வெளிநாடுகளிலிருந்து வரும் அரிசியை மட்டுப்படுத்தாமல் விடுவதாகும். சென்ற சில வருஷங்களாக இந்து சீனத்திலிருந்தும் சியத்திலிருந்தும் அரிசி இறக்குமதி, வந்துகொண்டே இருக்கிறது. அதனை ஒருவாறு மட்டுப்படுத்தவேண்டும் என்ற கூக்குரலை அரசாங்கத்தார் கவனிக்கவில்லை. இந்த ஆண்டில் இவ்விரு நாடுகளிலிருந்தும் இறக்குமதியான அரிசியின் அளவு சென்ற ஆண்டுகளில் இறக்குமதியான சராசரி அளவைக்காட்டிலும் பல மடங்குகளாகும். ஏற்கனவே விலை குறைந்த நிலையில் இதுவும் சேர்ந்து இந்த தேசத்தில் விலைவாசிகளை மிகவும் குறைத்துவிட்டது. இத்தகைய் இறக்குமதியை முற்றிலும் சிலகாலத்தில் நிறுத்திவிட வேண்டும். அவசியமென்றால் அதன்பிறகும் நிறுத்து முறையும் சிலகாலம் கையாட வேண்டும். இந்த இராசதானியில் நடைமுதல் வருஷத்தில் இறக்குமதியான அரிசியின் அளவு சென்ற வருஷத்தில் இருந்ததைக் காட்டிலும் ஆறு மடங்காகும். நமக்குக் கிடைத்த ஆதாரங்களிலிருந்து 1933ஸு அக்டோபர் மாதம் வரையில் இறக்குமதியான அரிசியின் அளவு 6458 டன்களாகும். ஆனல் அதே காலத்திற்கு இந்த வருஷத்தில் இறக்குமதியான அளவு 38034 டன்களாகும் இதுவன்றியும் வெளியூரிலிருந்து நெல்லும் இந்ததேசத்திற்கு மிக அதிசமாகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

## போக்கு வரவிற்குரிய சாதனங்களும் ரயில் சத்தமும்.

போக்குவரவிற்குரிய சாதனங்களில் சீர்திருத்தமும், இருப்புப் பாதைகளில் நடைமுதலில் இருந்துவரும் சத்தங்களில் சில மாறுதல்களும் விலைவாசிகளை உயர்த்துமென்று சிலர் நினைக்கிறார்கள். ரயில்வே சத்தங்களில் குறைவு இந்த விஷயத்திற்கு சற்று உதவி செய்யலாம் என்றாலும், அதாவது விலைவாசிகளை சற்று உயர்த்தும் என்றாலும், ரோடுகளை சீர்திருத்துவது மிகவும் கஷ்டமான காரியமாகத் தோன்றுகிறது. ஏனென்றால் ரோடுகளை செப்பனிடுவதற்குவேண்டிய கப்பி முதலியக்கருவிகள் கிடைக்கும் இடங்கள் மிக அணிந்துள்ள இடங்களில்... ரோடுகளை மிகச் செலவில்லாமல் சீர்படுத்தலாகும். ரெயில்வேகளில் அமுலிலுள்ள சத்தங்களைக் குறைப்பதென்பது சாமானியமல்ல. இது அந்தத்துறையில் தேர்ந்த நிபுணர்களால் செய்யப்படவேண்டிய ஒரு விஷயமாகும்; என்றாலும் அவ்விஷயத்தையும் நன்கு பரிசோதனை செய்து நெல் விளைவிக்கும் ஏனைய நாடுகளோடு வியாபாரத்தில் நமது நாட்டினரும் தமக்கு இலாபகரமாய் போட்டிபோடும் மார்க்கத்தை நாடவேண்டும்.

## தானியத்தைப் பயிர் செய்தலும் அதனை விற்பதும்.

நெல்லை வேண்டிய அளவிற்குமேல் நாம் பயிரிடுகிறோம் என்பதும், நெற்பயிரிடும் நிலப்பரப்பைக் குறைக்கவேண்டுமென்பதும் ஸிம்லாவில் நடைபெற்ற தானிய வளர்ச்சி சம்பந்தமான மகாநாட்டில் முடிவிற்கு வந்ததைப் போலவே, நாம் சுலபமாய் ஒத்துக்கொள்ள முடியாததாகும். சில தானியங்கள் ... பயிரிடும்

முறையினை அறிந்துகொள்ளாமலே விவசாயிகள் தானியங்களைப் பயிரிடுவதற்கேற்ற நிலப்பரப்பைக் குறைத்துக் கொள்ளுகிறார்கள்; இதனாலும் நமது கஷ்டம் அதிகப்படுகிறது. உதாரணமாக, நிலக்கடலையின் விலைக் குறைவைக் கருதி, இதற்குமுன் இதனைப் பயிர் செய்த நிலப்பரப்பில் சற்றேறக்குறைய பாதி பாகத்தில் இது பயிர் செய்யப்படவில்லை. ஆனால் நஞ்சை நிலங்களிலெல்லாம் நெற்பயிர் செய்யப்படுகிறதேயன்றி, அந்த நஞ்சை நிலங்களில் தானியத்தை மாற்றுவதென்பது சுலபமாகத் தோன்றவில்லை. ஆகவே நெல்லின் விலையை உயர்த்தவேண்டியதென்பது ஒவ்வொரு மிராசுதாரின் நோக்கமாக இருக்க வேண்டும்.

நாட்டின் விளைபொருள்கள் தொலைதேசங்களில் விற்பனையாக எங்கெங்கு தகுந்த மார்க்கட்டுகள் இருக்கின்றனவென்றும் எவ்வளவு குறைவான் சத்தத்தில் இப்பொருள்களை வெளியேற்றலாகும் என்றும் உபாயங்களைத் தேடவேண்டியது. சென்ற பல ஆண்டுகளாக ஒவ்வொரு நாடும் தன்னிடம் உண்டாகும் விளைபொருள்களில் தனக்குத் தேவையான அளவிற்கு மேற்பட்ட பாகத்தை எவ்வளவு நல்ல விலைக்கு எந்த மார்க்கெட்டில் விற்கலாகும் என்று வழிகளைத் தேடிக்கொண்டு வருகிறது. இவ்விஷயத்தில் எந்தெந்த உபாயங்களை அனுசரிக்கலாம் என்று மார்க்கட்டுகளைத் தேடிப்பிடிப்பதில் அனுபவம் வாய்ந்தவர்களை நியமித்து தனது வேலையை நடத்திக் கொண்டு வருகிறது. சென்ற நான்குவருஷங்கட்கு முன்னர் திடீரென்று விலைவாசிகள் குறைந்தவுடனே, அதன் காரணத்தை நன்குணர்ந்து சாமான்களை விற்பதற்கு ஏற்ற மார்க்கட்டுகளைத் தேடிப்பிடிக்க தகுந்த நிபுணர்களை ஏற்படுத்தவேண்டுமென்று முயற்சி செய்யப்பட்டபோதிலும், அரசாங்கத்தார் மார்க்கட்டுகளைத் தேடிப்பிடிப்பது வியாபாரிகளின் கடமையென்றும் அந்தப் பொறுப்பை அரசாங்

கத்தார் ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் கூறிவிட்டார்கள். இல் வரும்படியையே பெரும்பாலும் தனது வரும்படியாகக் கொண்ட ஓர் அரசாங்கத்தார் விளைபொருள்களை எப்படி விற்று விவசாயிகட்கு இலாபத்தை உண்டாக்கிக்கொடுத்து, சுலபமாக வரியை வசூலிக்கலாகும் என்று தெரிந்து கொள்ளாமலிருந்தது ஆச்சரியமே. இவ்விஷயத்தைக் கவனிப்பதற்கு நியமிக்கப் பெற்ற ஸ்பெஷல் ஆபீஸர் நமது மாகாணத்தில் முக்கியமான மிராசுதார்களைக் கண்டும், சங்கங்களோடு பேசியும், ஒவ்வொரு ஜில்லாவிலும் தாலூக்காவிலும் உள்ள நிலைமைகளை கவனித்தும் வருகிறார். ஆனால் இவர் தம்முடைய முடிவுகளை வெளிப்படுத்தி நமக்கு ஓர் ஏற்பாடு உண்டாக்குவதற்குள், வாய்தா தண்டவேண்டிய காலம் உண்டாகப் போகிறது. சட்ட சபையிலும் வெளியிலும் நிலவரியானது ஆங்கிலேயர் வருவதற்கு முன்னிருந்ததைப்போல் தானியமாகவே வாங்கப்படவேண்டும் என்று பல தடவைகளில் சொல்லிப்பார்த்தும் ரெவெனியூ மெம்பர் அவர்கள் இது செய்யக் கூடியதன்று என்று இதனை மறுத்தே வருகிறார். நிலவரி குறைந்தாலொழிய ஸ்பெஷல் ஆபீஸரின் பிரயத்தனங்கள் நமக்கு பயன் தருமோ என்பது சந்தேகத்தில் இருக்கிறது. தஞ்சாவூர் ஜில்லாவில் ஸ்பெஷல் ஆபீஸர் சென்று பார்த்த இடங்களிளெல்லாம் இவ்விஷயத்தை நன்கு உணர்த்தப்பட்டார். இவ்விஷயமாய் ஏதாவது சௌகரியம் ஏற்பட்டாலொழிய வேறு எவ்விதவழியும் நன்மை பயப்பது போலத் தோன்றுமேயன்றி உண்மையில் அவ்வித நன்மை பயந்ததாகாது. ஓர் அரசாங்கத்தின் நலமும் அவ்வரசாங்கத்திற்கு வரிசெலுத்துபவரின் நலமும் ஒன்றுபடப்பிணைந்துள்ளது. அரசாங்கம் என்னும் இயந்திரம் மிக மெதுவாகத் தான் செல்லுகிறது. குடியானவன் தனது விளைபொருள்களை விற்பதற்குரிய ஓர்மார்க்கட்டைத் தேடிக்கொடுப்பது முக்கியமாகும் என்பதை

உணர்ந்து, அவ்வழியில் நகர்வதற்கு இவ்வளவு காலம் ஆகியிருக்கிறது. மேற் கூறியவாறு ஓர் ஸ்பெஷல் ஆபீஸர் நியமிக்கப் பெற்றிருக்கிறார். ஆனால் அவர் தமது முடிபுகளை அரசாங்கத்தாருக்கு எடுத்துக்காட்டி ஏற்ற வழிகளைத் தேடுவதற்குள் நாம் வரி கொடுக்கவேண்டிய தவணை வந்துவிடுகிறது. தம்மிடமுள்ள எல்லாப் பொருள்களையும் வரிகொடுப்பதிலேயே பெரும்பாலும் மிராசுதார்கள் செலவழித்து விட்டார்கள். இனிமேல் மாசூல் ஜப்தி செய்துதான் வரியை வாங்கவேண்டிய நிலைமைக்கு வந்துவிட்டார்கள். ரெவெனியு பாக்கி விஷயமாய் மகசூலை ஜப்தி செய்து அதனை விற்று தங்கட்குரிய வரிக்கு ஈடுசெய்துகொள்ளலாம் என்று மிராசுதார்கள் மிகச்சுலபமாய்ச் சொல்லிவிடலாம். அப்பொழுதுதான், பெரிய மிராசுதார்களுஞ்சரி, சிறிய மிராசுதார்களுஞ்சரி, பொதுவாக மிராசுதார்களெல்லாம் பொறுக்கொணாத வரியால் கஷ்டப்படுகிறார்கள் என்று அரசாங்கத்தார் உணருவார்கள். மிராசுதார்களை முன்னுக்குக் கொண்டுவந்து அவர்களுடைய விளைபொருள்கட்கு நல்ல விலை கிடைக்கக்கூடிய மார்க்கட்டுகளையும் கண்டு பிடிக்க வழியைத் தேடுவது தமது கடமையென உணர்வார்கள். நமது கைத்தொழிலை விருத்தி செய்து மைசூர், பரோடா முதலிய சுதேச இராஜாங்கங்கள் போல நாமும் முன்னுக்கு வரமுடியாது என்பதல்ல. புதிய கைத்தொழிற் சாலைகளை ஏற்படுத்துவதற்கு ஏராளமான முதல் வேண்டும். முதலில் இவ்வித கைத்தொழில்களை அரசாங்கத்தார் ஆரம்பித்துவிட்டு, தாமாகவே நம்மில் பலர் அத்தொழில்களை ஏற்றுக்கொள்ளுந்தருணம் வந்தபொழுது அரசாங்கத்தார் விலகிக் கொள்ளலாம். எந்தத் தொழிலையும் எவ்வளவு விரிவாகவும் நடத்தப் போதிய மின்சார சக்தி நமது தென்னிந்தியாவிலேயே இருப்பதால், நமது அரசாங்கத்தார் இவ்வித துறைகளில் ஈடுபடுவதற்குப் பின் வாங்க வேண்டியதில்லை.

## இந்திய வியாபாரமும் கைத்தொழிலும்.

இந்தியாவில் 1933-34ல் வியாபார நிலைமையினைப் பற்றிய வெளியீட்டிலிருந்து நமது நாட்டிற்கு சௌகரியம் உண்டாயிருப்பதாக நாம் ஊகிப்பதற்கு இடமில்லை. இவ்வுலகில் பல பாகங்களிலும் உள்ள பொருளாதார நிலைமைகள் நமது இந்திய நாட்டு வியாபாரத்தையும் பலவிதங்களில் கஷ்டத்தை விளைவித்திருக்கின்றன. அகில உலக பொருளாதார மகாநாடு திருப்திகரமாய் நடைபெறவில்லை என்ற விஷயமானது, அம்மகாநாட்டில் சம்பந்தப்பட்ட எல்லா நாடுகளிலும் ஒரு பரபரப்பை உண்டாக்கி, பொருளாதார விஷயமாய் ஒவ்வொரு நாடும் தனித்திருந்து தத்தமக்குவேண்டிய சாதனங்களை, பிறநாட்டுக் கலப்பில்லாமல், தங்கு தடையில்லாமல், இன்னும் அதிகமாகத் தேடிக்கொண்டு போவதில் பிற நாட்டு வியாபாரங்களை தமது நாட்டில் பரவவிடாமலிருக்கத் தடை செய்வதற்குரிய ஒவ்வொரு வழியையும் தேடவேண்டிய நிலைக்கு கொண்டு வந்துவிட்டது. இவ்விதமாக ஒவ்வொரு நாடும் மறந்திருந்த பண்டைக்காலத்திலிருந்த ஒவ்வொரு ஏற்பாட்டையும் நாடிக்கொண்டு வருதலால் பலநாடுகள் சம்பந்தமான நாணய நிலை இன்னும் நிச்சயமற்ற நிலையில் இருந்து வருகிறது. ஒவ்வொரு நாடும் இந்தப் பண முடக்கடியை எப்படி நிவர்த்திப்பது என்கிறவிஷயத்தில் தகுந்த ஏற்பாடுகளைத் தேடுகின்றன. ஆனால் நமது இந்தியாவில் என்ன செய்கிறார்கள்? ஒன்றும் இல்லை. கைத்தொழில் மிகுந்த பல தேசங்கட்கும் நமது இந்தியா பல ஆண்டுகளாக தொழிற்கு இன்றியமையா பல விளைபொருள்களை அனுப்பிக்கொண்டு வருகிறது. இப்பொழுது திடீரென விலைகள் குறைந்தமையால் இந்தியா கஷ்டப்படுகிறது. உதாரணமாக நிலக்கடலையையும் பருத்தியையும் எடுத்துக்கொள்ளுங்கள். பிறநாடுகளை நாம் நம்பியிருந்த தொழில்கள் சம்பந்தமான விளைபொருள்களை எல்லாம்

நமது நாட்டிலேயே நாம் உபயோகப்படுத்திக் கொள்ளும் வழி களை நாம் தேடிக்கொள்ள வேண்டியது. கூடியவரையிலும் பிற நாட்டுதவியின்றி இந்தியா இருக்கும்படி, நாம் செய்துகொள்ள வேண்டியது. இந்த விஷயத்தில் அரசாங்கத்தார்தான் நமக்கு உதவி செய்யவேண்டும். இப்பொழுது சர்க்கரை நெருப்புக் குச்சிகள் ஆகிய இவைகளில் வரிபோடப்பட்டிருப்பதைப்போல் இந்தியாவின் கைத்தொழிற்கு இடையூறாக வரிபோடாமலிருக்க வேண்டிய ஏற்பாடுகளை நாம் செய்து கொள்ள வேண்டியது. சென்ற சில வருஷங்கட்கு முன்பாக ஸ்வீடன் தேசத்தையே நாம் தீக்குச்சிக்கு எதிர்பார்த்திருந்தோம். இந்தியாவிற்கு வேண்டிய அளவு தீக்குச்சிகளை நமது நாடும் செய்ய முடியும் என்ற நிலைமையில் வரிபோடப் பட்டிருக்கிறது. நாம் இது விஷயத்தில் என்ன பாடுபட்டும் வெற்றிபெற முடியவில்லை. ஒவ்வொரு சாமானுக்கும் வரி போடப்பட்டிருக்கிறது. நமது நாட்டில் எதற்குத் தான் வரி போடவில்லை; காற்றிற்குத் தான் இல்லை; அதுவும் ஒருகாலத்தில் வரியை ஏற்றுக்கொள்ளவேண்டி யிருக்கும் போலும்.

## முடிவுரை.

இக்கஷ்டங்களெல்லாம் தஞ்சாவூர் ஜில்லாவில்தான் இருக் கின்றனவென்றும், இந்த ஜில்லாவில்தான் இவ்விஷயமாய் பெருங்கூக்குரல் ஏற்பட்டிருக்கிறதென்றும், இந்த ஜில்லாவில் தான் இது சம்பந்தமான விஷயங்களில் பிரியாதுகள் தொடரப் படுகின்றன என்றும் கருதற்க. நாம் அனைவரும் இது விஷய மாய் ஒத்துழைத்து மிராசுதார்களின் கஷ்ட நிலை அரசாங்கத் தாருக்கு நன்கு விளங்கும்படி வற்புறுத்திச் சொல்ல வேண்டி யது நமது மாகாண முற்றிலும் நிலவரி, நிலத்தினின்றும் எல்லாச்செல்வும் போக கிடைக்கும் வரும்படியில் ஆறிலொன் றாகவும், எக்காலத்தும் அந்த விழுக்காடே நிலைபெற்றிருக்கவும்

தகுந்த ஏற்பாடுகளைத் தேடிக்கொள்ளும் விஷயத்தில் யாதொரு காலமும் தாழ்க்கக்கூடாது. தாலூகா மிராசுதார்களின் சங்கத்தின் தொகையை இன்னும் பலப்படுத்த வேண்டியது. இது வல்லாமல் ஒவ்வொரு கிராமத்திலும் மிராசுதார்களின் சங்கம் ஏற்படவேண்டும். போக்குவரவிற்குரிய சாதனங்களும் வியாபாரத்தில் பிற நாடுகளோடு போட்டிபோடுவதில் சௌகரியங்களைத் தேடிக்கொடுப்பதும் மிகவும் இன்றியமையாதனவென, இந்திய அரசாங்கத்தாருக்கு நாம் வற்புறுத்திக் காட்டவேண்டியது. பைனான்ஸ் (Finance) மெம்பர் அவர்கள் வரியைத்தள்ளிக் கொடுக்கும் விஷயமாய் சிறிய மிராசுதார்கள் கவலை எடுத்துக் கொள்ளவில்லையென்றும், பெரிய மிராசுதார்கள் தான் இது விஷயத்தில் பெருங்கூக்குரலிடுகிறார்கள் என்று வரவு செலவு திட்டக் கணக்கை நிறைவேற்றுகிற பொழுது சொல்லிய வார்த்தைகள், எந்த விஷயத்தைப்பற்றி எடுத்தாலும் ஒவ்வொரு மனிதனும் இதனைக் குறித்துப் பேசவில்லை, ஆகவே இது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்று எப்பொழுதும் அரசாங்கத்தார் சொல்லி வரும் ஓர் கொள்கையாகும். அரசாங்கத்தாருக்கு இருக்கும் இந்த எண்ணத்தை மாற்ற நீங்கள் கிராம மிராசுதார்கள் சங்கங்களை ஏற்படுத்தி இடைவிடாமலும், அழுத்தமாகவும், சட்டபூர்வமாகவும் அரசாங்கத்தாருக்கு நீங்கள் உங்கள் குறைகளை எடுத்து வற்புறுத்திக் காட்டவேண்டியது. இந்த சங்கங்கட்குப் போதிய பணத்தை சம்பாதித்துக் கொள்ளுங்கள். சாதி, சமயம் முதலிய வேற்றுமையின்றி இது காரணமாக நீங்கள் எல்லாரும் ஒன்று சேருங்கள். அபிப்பிராய பேதங்கள் உங்களுள் ஒற்றுமையைக் குறைக்காமலிருப்பதாக. பொருளாதார நிலையையும், ஒவ்வொரு கிராமத்திலும் மிராசுதார்களின் கடன் எவ்வளவு என்று தெரிந்துகொள்ள தகுந்தபடி பரிசீலனை செய்வீர்களாக. இவ்விஷயம் மிகவிரைவில் முடிக்கப்பெற்று அரசிய

லாரால் நியமிக்கப்பெற்ற ஸ்பெஷல் ஆபீஸரிடம் இந்த முடிவுகள் சேர்ந்துவிடவேண்டும். பயிரிடுதல், நீர்ப்பாசனம், விளைவு சம்பளம், விலை விவசாய சம்பந்தமான பொருள்களின் ஏற்றுமதி, இறக்குமதி, ஒவ்வொருவகையான நிலத்திலும் ஏக்கருக்குக் கிடைக்கும் வருமானம், ஆகிய இந்த விஷயங்களைக் குறித்த் கணக்குகளை நீங்கள் தேடிக் கொள்ளவேண்டியது. அங்கங்கே அரசாங்கத்தாரிடம் இதுவிஷயமான சமாசாரங்களை எடுத்துச் சொல்லுங்கள். அடிக்கடி அவர்களைத் தொந்தரவு படுத்துவதா என்று நீங்கள் மலைக்கவேண்டாம். இதுவரையில் அரசாங்கத்தாரின் அனுதாபத்தை நாம் எழுப்பவில்லையே என நீங்கள் கருதவேண்டாம். முயற்சிகளின் பயனின்மைக்கு மனத்தளர்ச்சி அடைய வேண்டாம். நாம் விழுவதெல்லாம் எழுந்து நிற்கத் தெரிந்து கொள்வதற்கே, நமது தோல்வியெல்லாம் இறுதியில் வெற்றிபெறுதற்கே. கைத்தொழில் விருத்தியடைய ஏற்ற வழிகளைத் தேடுங்கள். அதனால் நமது நாட்டில் உள்ள விவசாயப் பொருள்கள் நமது நாட்டிலேயே பயன்படும்.

மிக வருத்தமுற்ற நிலையிலுள்ள மிராசுதார்களின் நிலைமையை நல்ல நிலைமைக்குக் கொண்டுவர நீங்கள் எல்லாம் ஒன்று சேருங்கள். இது நமது நன்மைக்கேயாகும்.

"உழுவா ருலகத்தார்க் காணியஃ தாற்றார்
தொழுவாரே யெல்லாம் பொறுத்து."

சிதம்பரம்,
30—12—34.

V. நாடிமுத்துப் பிள்ளை.